கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண். OS. No. 110/2025 நாள்: 19.06.2026

வா.சா.2 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வா.சா – 2 விக்னேஷ் முன்னிலையானார். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

1 ஆம் பிரதிவாதி தரப்பில் வா.சா.2 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி எனது பெரியம்மா மகள் அக்கா உறவு முறை ஆவார். சாட்சி சொர்ணவள்ளி எனது அம்மா ஆவார். நான் மதுரையில் நாகமலைபுதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். வாதியின் அம்மா இறக்கும் போது மதுரை கோச்சடையில் இருந்தார். நான் இருக்கும் இடத்திற்கும் கோச்சைடைக்கும் 5 கீலோ மீட்டர் தூரம் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 2016 ஆம் ஆண்டில் இருந்து வாதி விவாகரத்து காரணமான மன உளைச்சலில் இருந்தார் என்றும் 1 ஆம் பிரதிவாதி வாதியை மிரட்டினார் என்றும் நான் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2016 ஆம் ஆண்டில் வாதி நல்ல மன நிலையில் இருந்ததால் தான் விவாகரத்து மனு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரியல்ல.

எனது அம்மா வாதியின் வீட்டில் தங்கி வாதியின் தாயாரை நல்லமுறையில் பராமரித்து வந்தார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தாயார் 1 ஆம் பிரதிவாதியின் வீட்டில் தான் இருந்தார் என்றும் அங்கிருந்து தான் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் சொன்னால் சரிதான். 01.09.2020 ஆம் தேதி பாகப்பிரிவினை பத்திரம் எழுதிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் நான் எதுவும் செய்யவில்லை. 09.09.2016 ஆம் தேதியிட்ட

தான செட்டில்மெண்ட் பத்திரம் வாதி, பிரதிவாதி, வாதியின் அம்மா, சகோதரி ஆகியோர்கள் சேர்ந்து எழுதி கொள்ளப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியவில்லை. 01.09.2020 ஆம் தேதி பிரதிவாதி, வாதியின் அம்மா, ஆகியோர் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும் அந்த பத்திரத்தில் வேறு நபரின் கையொப்பம் தேவையில்லை என்றும் சொன்னால் நானும் எனது அம்மாவும் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. 1 ஆம் பிரதிவாதி தொடர்ந்து எனக்கும் எனது அம்மாவிற்கும் எங்கள் தேவைக்கா மாதங்தோறும் பணம் கொடுத்து வந்தார் என்றும் எனது அம்மாவின் நடவடிக்கை சரியில்லாத காரணத்தினால் பணம் கொடுப்பதை நிறுத்தி விட்டார் என்றும் அதனால் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

(1 ஆம் பிரதிவாதி தரப்பிலான குறுக்கு விசாரணையை 2 ஆம் பிரதிவாதி adopt செய்து கொள்கிறார்)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/- C. Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.